# கீர்த்தனைப் பாடலாசிரியர்களது வாழ்க்கைக் குறிப்புகள்

## 1. வேதநாயக சாஸ்திரியார்

கீர்த்தனை விழாவில் குழுப் பாடல்களாகவும் நடனப் பாடல்களாகவும் பாடப்படவுள்ள ‘பாவி நான் என்ன செய்வேன்’, ‘தேவதே ஓர் ஏகவஸ்து’, ‘சீர்ஏசுநாதனுக்கு ஜெயமங்களம்’, முதலிய பாடல்களை இயற்றியவர், ‘சுவிசேடக் கவிராயர்’, ‘ஞானதீபக்கவிராயர்’, ‘வேத ஞானக் கவிச்சக்கரவர்த்தி’, ‘வேதசாஸ்திரி’, என்றெல்லாம் பாராட்டப்படும் வேதநாயக சாஸ்திரியார், 1774, செப்டம்பர் 7இல் நெல்லையில் பிறந்து, ஜெர்மானிய அருட் தொண்டர் கிறிஸ்டியன் பிரடெரிக் கவார்ட்சையரால் தஞ்சையில் வளர்க்கப்பட்டு, தஞ்சை மராட்டிய மன்னன் சரபோஜியின் அரசவைப் புலவராகச் சிலகாலம் இருந்து, தம் வாழ்வின் கடைசி வரை தஞ்சையிலே வாழ்ந்து இறைப்பணியாற்றி, 1864, ஜனவரி 24-ல் தமது பழுத்த வயதில் (91) இறையடி சேர்ந்தவர். இவரது பாடல்கள் இடம்பெறாத திருச்சபை வழிபாடுகளோ, கிறிஸ்தவக் குடும்ப விழாக்களோ தமிழகத்தில் இல்லையென்று சொல்லுமளவு, நூற்றுக்கணக்கான கிறிஸ்தவக் கீர்த்தனைகளை இயற்றித்தந்தவர். கீர்த்தனைகளையன்றி தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், தியான உரைகள், நாடகங்கள், சதுர் பிரசங்கங்கள் முதலிய நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர். இவரது நூல்களுள் பெத்லகேம் குறவஞ்சி, ஞான நொண்டி நாடகம், ஜெபமாலை முதலியவை குறிப்பிடத்தக்கவை. இவரது மரபு வழியினர் தஞுசையிலும், சென்னையிலும் ஆண்டவரின் திருப்பணியைத் தொடர்ந்து செய்து வருவது மகிழ்ச்சி தருகிற செய்தி.

## 2. டாக்டர் சவரிராயன் ஏசுதாசன்

இந்தக் கீர்த்தனை விழாவில் பாடப்படவுள்ள ‘எத்தனை நாவால் துதிப்பேன்’ என்ற இனிய பாடலை இயற்றியவர் பெரியண்ணன் எனத் தமிழ் கிறிஸ்தவர்களால் அன்புடன் அழைக்கப்படும் டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் ஆவார். மேல்நாட்டில் பயின்று மருத்துவத்தில் உயர் பட்டங்கள் பெற்ற டாக்டர் சவரிராயன், ஏசுபெருமானின் திருக்காட்சி கண்டு, அவருடைய அழைப்பைக் கேட்டு அவருடைய திருவடிகளில் தஞ்சம் புகுந்து துறவற வாழ்க்கையை மேற்கொண்டு ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக இறைப்பணியாற்றியவர் இவர், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் குருகுல ஆஸ்ரமம் ஒன்றை அமைத்தார். அதை கிறிஸ்துகுல ஆஸ்ரமம் என வழங்கி, அங்கு இந்திய முறைப்படி ஆலயம் ஒன்றைக் கட்டி இந்திய தமிழ் இசை மரபுகளில் அமைந்த பாடல்களை அங்கு பாடச் செய்தவர். அப்பாடல்களை ‘ஆசிரமம் பாமாலை’ என்ற பெயரில் நூலாகத் தொகுத்துத் தந்துள்ளார். இந்நூலில் இவர்

இயற்றிய ‘தெய்வன்பின் வெள்ளமே’ ‘பக்தருடன் பாடுவேன்’, ஆண்டவா உந்தன் சேவைக்கு அடியேன்’ முதலிய பாடல்கள் அமைந்துள்ளன. ‘ரகுபதிராகவ ராஜாராம்’ என்ற பாடலில் மெட்டில் இவர் எழுதிய ‘‘மீட்பர் இயேசுவே வல்லவராம்’’ என்ற பாடலும் புகழ் பெற்ற ஒன்று.

### 3. சா.பரமானந்தம் ஐயர்

இக்கீர்த்தனை விழாவில் பாடப்படவுள்ள ‘‘தினமே நான் உன்னை’’ என்ற பாடலை இயற்றியவர். சென்னையில் வாழ்ந்த மிகச் சிறந்த போதகராகவும் பல்வேறு தியான நூல்களின் ஆசிரியராகவும் சிறந்த அருளுரையாகவும் பலராலும் அறியப்பட்டுள்ளவர் பரமானந்தம் ஐயர் ஆவார். சென்னையிலுள்ள இராயபுரம் ஆலயத்தில் குருவானவராகப் பணியாற்றிய இவர் திருப்புகழ், காவடிச் சிந்து, தேவாரம் முதலிய இந்து சமயப் பாடல்களின் பண்ணிலேயே கிறிஸ்தவப் பாடல்கள் பலவற்றைப் புனைந்தார். தமது கீர்த்தனைப் பாடல்கள் 168ஐத் தொகுத்து ‘இரட்சணியக் கீர்த்தனைகள்’ என்ற நூலை 1920 இல் வெளியிட்டுள்ளார். தமது பாடல்களைத் தாமே முறையாகப் பாடிடவும் பிறருக்கும் பயிற்றுவிக்கவும் வல்லவர். ‘சீரேசுபாலன் ஜெயமனுவேலன்’, ‘எழுந்தார் இறைவன் ஜெயமே’, ‘இத்தரை மீதினில் வித்தகராயெழுந்த’, ‘காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்’ முதலிய பாடல்களும் இவர் இயற்றியவையே.

### 4. வே.மாசிலாமணி ஐயர்

இந்தக் கீர்த்தனை விழாவில் பாடப்படும் ‘தந்தானைத் துதிப்போமே’, ‘தாரகமே தாரகமே பசிதாகத்துடன்’, ஆகிய பாடல்களை இயற்றியவர். திருவண்ணாமலையிலும் மதுரையை அடுத்த திருப்புவனம் என்ற இடத்திலும் போதகராகப் பணியாற்றிய வே.மாசிலாமணி ஐயர் ஆவார். திருவண்ணாமலையில் அக்காலத்தில் நடந்துவந்த வாரச் சந்தையில் கூடும் மக்களைக் கவரவும் ‘தாகம் மிகுந்தவரே’, ‘அமர்ந்த தண்ணீரண்டை வாரும்’ எனத் தொடங்கும் பாடல் பாடப்படுவதுண்டோம். தாமே வயலின் இசைத்து, இனிமையாகப் பாடி அருட் செய்தியை வல்லமையாக அறிவிக்கும் ஆற்றல் பெற்ற இவரது பல்வேறு பாடல்கள் இன்றும் தமிழ்க்கிறிஸ்தவர்களால் மிக விரும்பிப் பாடப்படுகின்றன. ‘ஆர்இவர் ஆராரோ’ என்ற கிறிஸ்துமஸ் பாடல் ‘ஆனந்தமே ஜெயா ஜெயா’, ‘‘வந்தனம் வந்தனமே’’ முதலிய புத்தாண்டுப் பிறப்புப் பாடல்கள் முதலியன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

# கிறிஸ்தவக் கீர்த்தனைச் செல்வங்களை வழங்கிய அருள் வள்ளல்கள்

வானம் பூமியோ? பராபரன் மானிடன், ஆனாரோ? நம்பி வந்தேன் மேசியா நான் நம்பி வந்தேனே முதலிய பாடல்களை இயற்றியவர் **வேதநாயக சாஸ்திரியார்.**

சத்தாய் நிஷ்களமாய், கள்ளமுறுங் கடையேனுங் முதலிய பாடல்களை இயற்றியவர் **கிருஷ்ணபிள்ளை.**

யேசுவே கிருபாசனப் பதியே, பெத்தலையில் பிறந்தவரைப் போற்றித்துதி மனமே முதலிய பாடல்களை இயற்றியவர் **யோ. பால்மர்.**

மன்னவா கிறிஸ்தே எந்தன் மனதிற் கிசைந்த வஸ்தே அன்று முதலென்றுமுள்ள முற்பிதாக்கள் யாரும் முதலிய பாடல்களை இயற்றியவர் **மாசிலாமணி ஐயர்.**

உலகில் பாவபாரத்தால் சோரும், ஐயாவுன் திருவுளச் சித்தமே முதலிய பாடல்களை இயற்றியவர் **சவரிராயன் ஏசுதான்**

குணப்படுபாவி, விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் முதலிய பாடல்களை இயற்றியவர் **ஞா.சாமுவேல்**

பாவம் போக்கும் ஜீவநதியைப் பாராய், பொன்னகர் பயணம் போகும் புண்ணியங்களே முதலிய பாடல்களை இயற்றியவர் **வேதநாயகர்**

காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில், எழுந்தார் இறைவன் ஜெயமே ஜெயமெனவே முதலிய பாடல்களை இயற்றியவர் **சா.பரமானந்தம் ஐயர்**

வந்து நல்வரம் தந்தனுப்பையா, நல்ல தேவனே ஞான ஜீவனோ முதலிய பாடல்களை இயற்றியவர் **அருமைநாயகம்.**

யேசுமகாராஜன் வரும் வேளையறியாயோ, நம்பிப் பிழைக்கலாம் வாரீர் இயேசு கிறிஸ்துவை முதலிய பாடல்களை இயற்றியவர் **ஈசுவர பாக்கியம் ஈசாக்கு**

கர்த்தர் பிறப்புப் பண்டிகையை என்ற பாடலை இயற்றியவர் **மோட்சக்கண்**

உய்யும் வகையிது, நிதம், நிதம் உனையே, முதலிய பாடல்களை இயற்றியவர் **மாயூரம் வேதநாயகம் பிள்ளை**

கண்டேனென் கண்குளிர, மங்களம் செழிக்க கிருபையருளும் முதலிய பாடல்களை இயற்றியவர் **ஆபிரகாம் பண்டிதர்**

மேசியா ஏசு நாயனார் எமை மீட்கவே நரனாயினார், வாரும் எமது வறுமை நீக்க வாரும் தேவனே முதலிய பாடல்களை இயற்றியவர் **யோசேப்பு**

**தொகுப்பு : மோ.மைக்கேல் பாரடே**